(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

[1978 மார்ச் 4

298. தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரிய தொழில் நுட்பம் சாராத சார்நிலைப் பணி விதிகளுக்கான சிறப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதித் துறையின் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதியிடப் பெற்ற 306 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

90. 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத் திற்கிணங்க, 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு திரு. ரெ. வீ. சவுந்தரராஜன், சட்டமன்றப் பேரவை உறுப்பினரது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்கு பேரவை முன் வைக்கப்பெற்றது.

**91. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு.

இணைப்பு

[600-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 387—க்கான விடையைக் காண்க].

(அ) பாதகமான கருத்துக்களை வெளியிட்டதற்காகவும், பத்திரிகைத் தணிக்கை ஒழுங்கு முறைகளை மீறியதற்காகவும், மாநில அரசு தாமாகவே நடவடிக்கை எடுத்ததன் பேரிலும் மாநிலத் தணிக்கை அதிகாரி அனுப்பியதன் பேரிலும், கீழ்க் கண்ட செய்தித் தாள்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் பிரதிகள் இந்திய எல்லைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் 47, 48-வது விதிகளைச் சேர்ந்த விதித்துறையின் கீழ் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று 1976ல் ஆணையிட்டது.

நாளிதழ்கள் —

(1)	இனமுரசு	(7—5—1976, 8—5—1976)
(2)	நவமணி	(21-5-76, 22-5-76)
(3)	செங்கொடி	(20-7-75, 21-7-75)
(4)	விடுதலை	(29-12-75 முதல் 1-1-76 வரை)
(5)	விடிவெள்ளி	(11-12-76 முதல் 1 -12-76 வரை)—இரண்டு ஆணைகள்.

** 2—3—1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றுள்ளன.